## <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>
## <u>DVC. No.1/2021</u>

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. மோகன், Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 3 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 26– ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.குமார் (PW3)<br>வயது. | நாள் 26.06.2023 |
| த/பெ.மதுரை | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>ம.சா.3 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பின் 3ம் சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2. மனுதாரர் கேட்டுக்கொண்டதின் பேரில் பரிகாரம் வழங்க பிராத்திக்கிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை..</u>

3. நான் மனுதாரர் கலையரசியின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கு கலையரசி மற்றும் தனலட்சுமி ஆகியோர் உடன் பிறந்தவர்கள் ஆவார்.

4. எனது பெற்றோர்கள் தனியார் ஜுஸ் கம்பெனியில் கூலி வேலை செய்து வருகிறார்கள். எனது அப்பாவுக்கு மாத சம்பளம் 15,000/ ஆகும். எனது அம்மாவுக்கு மாத சம்பளம் 12,000/ ஆகும். நான் செங்கல்பட்டில் உள்ள நகை கடையில் வேலை செய்து வருகிறேன். எனது மாத சம்பளம் 18,000/ ஆகும்.

5. எனது சகோதரி கலையரசிக்கு 19.01.2018 ம் வருடம் செய்யூர் திருமலை கல்யாண மண்டபத்தில் கல்யாணம் ஆனது. திருமணமாகி முதல் 10 நாட்கள் எனது சகோதரி அவர் கணவருடன் விளங்கனூரில் அவரது கணவரின் சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தார். அதன் பின்னர் செங்கல்பட்டில் உள்ள எனது சகோதரியின் கணவரின் அண்ணியின் வீட்டில் 6 மாதங்கள் வசித்து வந்தார்கள்.

6. அதன் பின்னர் அங்கிருந்து பிரச்சனையானதால் எனது சகோதரியும் அவரது கணவரும் காஞ்சிபுரத்தில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தார்கள். சுமார் 1 வருட காலம் எனது சகோதரியும் அவரது கணவரும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தார்கள். எனது சகோதரிக்கும் அவரது கணவருக்கும் 09.06.2018 அன்று சண்டை நடந்தது.

7. அப்போது தான் இருவருக்கும் பிரச்சனை உள்ள விஷயத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது சகோதரி அடிக்கடி மாத்திரை எடுத்துக்கொண்டதால் அதை அவரின் கணவர் கேட்ட போது பிரச்சனை ஆரம்பித்தது என்றால் சரியல்ல. அவர் மாத்திரை எதுவும் எடுக்கவில்லை.

8. எப்போது இருவருக்கும் உள்ள பிரச்சனை பற்றி எனக்கு தெரியும் என்றாலும் எப்போது அதை எனது சகோதரியின் கணவரிடம் கேட்டேன் என்றால் 2018 ம் வருடம் அவர்களுக்குள் பிரச்சனை இருப்பதை தெரிந்துகொண்டேன். தேதி, மாதம் நினைவில்லை.

9. பிரச்சனை தொடர்பாக 2018 ம் வருடம் செங்கல்பட்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் புகார் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் ஆதாரமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

10. எனது சகோதரியின் கணவர் எப்போதும் எனது சகோதரியிடம் பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றாலும், நாங்கள் புகார் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. எங்கள் ஊருக்கும் விளங்கனூருக்கும் சுமார் 45 கி.மீ தூரம் இருக்கும். நாங்கள் தான் எனது சகோதரியின் கணவரையும் அவரது குடும்பத்தாரையும் அடித்து தாக்கினோம் என்றால் சரியல்ல.

12. நாங்கள் தான் எனது சகோதரியின் கணவரை அடித்து தாக்கினோம் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்களை முதலில் அடித்து தாக்கிவிட்டு எங்களுக்கு முன்பாகவே காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்துவிட்டனர்.

13. 09.06.2019 அன்று நாங்கள் தான் எதிர்மனுதாரையும் அவரது குடும்பத்தாரையும் அடித்து காயப்படுத்தினோம் என்றாலும் அதற்காக செய்யூர் காவல் நிலையத்தில் மனு ரசீது எண் வழங்கபட்டது என்றால் சரியல்ல.

14. உண்மையிலேயே எதிர்மனுதாரர் எங்களை தாக்கியிருந்தால் நாங்கள் செய்யூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றாலும் அவ்வாறு எதுவும் நடக்காததால் மேற்சொன்ன காவல் நிலையத்தில் எந்த புகாரும் பதிவு செய்யப்படவில்லை என்றால் எதிர்மனுதாரர்கள் எங்களை

தாக்கினார்கள் ஆனால் எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டும் என்று எங்களுக்கு அப்போது சரியாக தெரியவில்லை.

**15.** மேற்சொன்ன பிரச்சனைக்கு காவல் துறையில் பணி செய்யும் முருகன் தான் காரணம் என்றால் சரியல்ல. முருகன் என்பவர் பஞ்சாயத்தில் கிளர்க்காக வேலை செய்து வருகிறார் என்பதாலும், அவர் மீது வழக்கு பதிவு செய்தால் அவர் வேலைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலும், 31.08.2019 அன்று நடக்காத ஒரு சம்பவத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஆரம்பத்திலிருந்தே முருகன் என்பவரை காப்பாற்றும் எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அன்றைய தினம் அவர் அங்கு இருக்கவில்லை.

**16.** மனுதாரர் எனது சகோதரி என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை... இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur